# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது

**இலங்கையில் திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதை அறிமுகம் செய்வதற்கானதொரு சட்டமூலம்**

---

*கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன அவர்களால் 2020, சனவரி மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, திசெம்பர் மாதம் 16 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *315 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *17.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது

## இலங்கையில் திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயதை அறிமுகம் செய்வதற்கானதொரு சட்டம்

முகப்புரை.

சிறுவர் அல்லது பருவ வயதை அடையாதோரின் திருமணம் இளம் ஆளொருவரின் கல்வி, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பிற்கான உரிமை மீறல் ஒன்றாகும் என்பதாலும் அத்துடன் இலங்கையிலுள்ள சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் உள்ளடங்கலாக உடல் அல்லது உள வன்முறை, காயம் அல்லது துஷ்பிரயோகம், புறக்கணிப்பு அல்லது கவனயீனமான நடாத்துகை, முறைகேடாக நடாத்தப்படுதல் அல்லது சுரண்டல் ஆகியவற்றின் வடிவங்களால் பாதிப்படையச் செய்யக்கூடிய ஒரு பாரதூரமான சமூக தீங்காக இது கருதப்படுகின்றது என்பதாலும்:

வயது, இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை அல்லது பிறப்பிடத்தை அல்லது அத்தகைய காரணங்களுள் ஏதேனும் ஒன்றை பொருட்படுத்தாது இலங்கை அதன் அனைத்து பிரசைகளுக்கும் சட்டத்தின் சமமான பாதுகாப்பை உத்தரவாதமளிக்கின்றது என்பதாலும்:

எதிர்கால சந்ததியினர் சிறந்ததும் மிகவும் வளம் மிக்கதுமான சமூகமாவதற்காகக் கற்பதற்கும், அபிவிருத்தியடைவதற்கும் வளர்ச்சியடைவதற்குமான வாய்ப்பினைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய எதிர்கால சந்ததியினருக்கு அரசு கடமைப்பட்டுள்ளது என்பதாலும்; அத்துடன்

பதினெட்டு வயதிற்குக் குறைந்த ஆட்கள் அனைவருக்கும் சட்டத்தினால் சாத்தியமான அனைத்து பாதுகாப்பையும் வழங்குவதற்கும் ஆளெவரும் திருமணமொன்றை மேற்கொள்வதற்கு சம்மதித்தலோ அவரின் சார்பாக தீர்மானித்தலோ ஆகாது என்பதை உறுதிப்படுத்துவதற்கும் இச்சட்டத்தின் நோக்கத்திற்கும் எழுத்துவடிவத்திற்கும் முழுப்பயனை அளிப்பதற்காக உரிய அரச உறுப்புகளுக்கான நடவடிக்கைகளை அறிமுகம் செய்வதற்கும் இச்சட்டம் ஏற்பாடு செய்வதுடன் இதனால் சிறுவர் திருமணத்தை ஒழிப்பதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது என்பதைத் தெரிவிக்கின்றது என்பதாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1**. இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஆகக்குறைந்த வயது பதினெட்டு ஆகும்.

**2**. இந்தச் சட்டம் வலுவுக்கு வந்த பிறகு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட திருமணம் எதுவும் குறித்த திருமணத்துக்குரிய இரண்டு தரப்பினர்களும் பதினெட்டு வயதை பூர்த்திசெய்து இருந்தாலன்றி செல்லுபடியாகாது.

ஒப்பந்தத் தரப்பினர் சிறுவர் ஒருவராக இருக்கும் தேர்வின்பேரில் சிறுவர் திருமணங்கள் வறிதாகும்.

**3**. *(1)* இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ நிறைவேற்றப்பட்ட எந்தச் சிறுவர் திருமணமும், திருமணத்தின்போது ஒரு சிறுவராக இருந்துள்ள ஒப்பந்தத் தரப்பினரின் தேர்வின்பேரில் வறிதாக்கத்தக்கதாகும்.

(2) ஆயின், விண்ணப்பதாரி வாழுகின்ற உள்ளூர் நியாயாதிக்கத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் திருமண வறிதுத் தீர்வின்மூலம் சிறுவர் திருமணம் ஒன்றை இரத்து செய்வதற்கான விண்ணப்பம் ஒன்றை குறித்த திருமணத்தின்போது சிறுவர் ஒருவராக ஓர் ஒப்பந்தத் தரப்பினர் இருந்திருந்தால் மாத்திரமே தாக்கல் செய்யலாம்.

(3) விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்யும் நேரத்தில் விண்ணப்பதாரி பராயமடையாத ஒருவராக இருந்தால் விண்ணப்பத்தை அவரது பாதுகாவலர் அல்லது வழக்கு நண்பர்மூலமாக தாக்கல் செய்யலாம்.

(4) இந்தப் பிரிவின்கீழ் குறித்த விண்ணப்பம், விண்ணப்பத்தை தாக்கல் செய்கின்ற குறித்த சிறுவர் பராயமடைந்து இரண்டு வருடங்களைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் எந்த நேரத்திலும் தாக்கல் செய்யப்படலாம்.

(5) இந்தப் பிரிவின்கீழ் ஒவ்வொரு விண்ணப்பமும் எழுத்து மூலம் தாக்கல்செய்யப்படுதல் வேண்டும் மற்றும் விண்ணப்பதாரரினால் அல்லது அவர் சார்பில் விண்ணப்பத்தை தாக்கல்செய்யும்

ஆளினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும் என்பதுடன் முத்திரைக் கட்டணம் எதுவும் அற்றதாக இருத்தல் வேண்டும். பிரதிவாதி ஒருவருக்கான அல்லது ஒரு சாட்சிக்கான ஒவ்வோர் அழைப்புக் கட்டளையும் முத்திரைக் கட்டணம் அற்றதாகவும் இருத்தல் வேண்டும்;

(6) விண்ணப்பம் ஒன்று நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டதும்

(அ) குறித்த திருமணம் பதிவுசெய்யப்படும்போது குறித்த விண்ணப்பதாரி பதினெட்டு வயதை அடையவில்லை என்றும்; மற்றும்

(ஆ) திருமணம் பதிவுசெய்யப்பட்டது என்றும்;

நீதிமன்றம் அந்த விண்ணப்பத்தின்மீது திருப்தி அடையும்போது குறித்த நீதிமன்றம் அத்தகைய திருமணத்தை வறிதாக்கும் தீர்வை வழங்க வேண்டும்.

(7) இந்தப் பிரிவின்கீழ் திருமண வறிதுத்தீர்வை வழங்கும்போது விடயத்திற்கேற்ப குறித்த திருமணத்தின்போது அடுத்த தரப்பில் இருந்து அவர்களுக்கு கிடைத்த பணம், பெறுமதியுள்ள பொருட்கள், அணிகலன்கள் மற்றும் ஏனைய அன்பளிப்புகள் ஆகியவற்றை அடுத்த தரப்பினருக்கு திருப்பிக்கொடுக் வேண்டும் அல்லது அத்தகைய பெறுமதியுள்ள பொருட்கள், அணிகலன்கள், ஏனைய அன்பளிப்புகள் மற்றும் பணம் ஆகியவற்றுக்குச் சமமான ஒரு தொகையை வழங்க வேண்டும் என்று பணித்து நீதிமன்றம் திருமணத்துக்குரிய இரண்டு தரப்பினர்களுக்கும் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் அல்லது பொறுப்பாளர்களுக்கும் ஒரு கட்டளையை வழங்க வேண்டும்:

ஆயின் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு நீதிமன்றம் முன்னால் தோன்றி அத்தகைய ஒரு கட்டளை ஏன் வழங்கப்படக்கூடாது என்ற காரணத்தை காண்பிக்குமாறு அறிவித்தல்கள் வழங்கப் பட்டிருந்தாலன்றி அத்தகைய கட்டளை எதுவும் நிறைவேற்றப்படக் கூடாது.

(8) சிறுவர் திருமணத்தின் விளைவாக குழந்தைகள் பிறந்துள்ளபோது, அத்தகைய குழந்தைகளின் கட்டுக்காவலுக்கான ஒரு பொருத்தமான கட்டளையை நீதிமன்றம் வழங்க வேண்டும். இந்தப் பிரிவின்கீழ் ஒரு குழந்தையின் கட்டுக்காவலுக்கான கட்டளை ஒன்று வழங்கப்படும்போது குறித்த குழந்தையின் நலனோம்புகையையும் உயர்ந்த நலனையும் நீதிமன்றம் கருத்தில்கொள்ள வேண்டும்.

(9) ஒரு பிள்ளையை கட்டுக்காவலில் வைப்பதற்கான உத்தரவு அப்பிள்ளையின் சிறப்பான நலன்களை நிறைவேற்றக்கூடிய விதத்தில் அப்பிள்ளையை அணுகிப் பெற்றுக்கொள்ளும் தரப்பிற்குப் பொருத்தமான பணிப்புரைகளையும் பிள்ளையின் சிறப்பான நலன்களுக்கு அவசியமென நீதிமன்றம் கருதுகின்ற அத்தகைய ஏனைய உத்தரவுகளையும் உள்ளடக்கியதாக இருக்கலாம்.

(10) திருமணத்திற்கான தரப்பொன்றினால் அல்லது அவர்களது பெற்றோர்களினால் அல்லது பாதுகாவலர்களினால் பிள்ளைகளுக்கு தாபரிப்பை வழங்குவதற்கான பொருத்தமான அட்டவணையொன்றை நீதிமன்றம் வழங்கலாம்.

சிறுவர் திருமணங்களின் காரணமாக பிறந்த பிள்ளைகளது சட்டபூர்வமான நிலை.

**4**. மூன்றாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரம் செல்லுபடியற்றதாக்கப்பட்ட சிறுவர் திருமணமொன்று இரத்துச்செய்யப்படுதல் எவ்வாறு இருந்தபோதிலும் அத்தகைய தீர்வு வழங்கப்படுவதற்கு முன்னர் பேறான அல்லது கருக்கொண்ட ஒவ்வொரு பிள்ளையும், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர் பிறந்தவர்களாக இருப்பினும், எல்லா நோக்கங்களுக்காகவும் அவர்கள் சட்டரீதியான பிள்ளையொன்று எனக் கருதப்படல் வேண்டும்.

பொருள்கோடல்.

**5**. இச்சட்டத்தில் –

(அ) “சிறுவர்” என்பது பதினெட்டு வயதை அடையாத எவரேனும் ஆள் என்று பொருளாகும்.

(ஆ) “சிறுவர் திருமணம்” என்பது இருவரில் ஒருதரப்பு சிறுவர் ஒருவராகவுள்ள ஒரு திருமணம் என்று பொருளாகும்.

(இ) "திருமணம்" என்பது திருத்தப்பட்டவாறான 1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, கண்டிய விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழும் அதன் பயனாலும் ஒப்பந்தமிடப்பட்ட திருமணங்கள் மற்றும் இஸ்லாத்தைப் பின்பற்றும் ஆட்களுக்கிடையில் ஒப்பந்தமிடப்பட்ட திருமணங்கள் உள்ளடங்கலான ஏதேனும் திருமணம் என்று பொருளாகும்.

(ஈ) "பதிவாளர்" என்பது திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம், கண்டிய விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் மற்றும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் ஆகியவற்றிற்கமைய நியமிக்கப்பட்ட எவரேனும் மாவட்டப் பதிவாளர் அல்லது பிரதேசப் பதிவாளர் என்று பொருளாகும்.

**6**. இந்தப் பிரிவின்கீழ் யார் குற்றம் செய்தாலும் ஒரு நீதிவான் முன்னிலையில் சுருக்கமுறை விசாரணையின் பின்னர் தண்டனை மற்றும் அபராதத்திற்கு உட்படுத்தப்படுவார். தண்டனை.

(1) ஏதாவது சிறுவர் திருமணத்தைப் புரிகின்ற, நடத்துகின்ற, நெறிப்படுத்துகின்ற அல்லது உடந்தையாக இருக்கின்ற எவரேனும் இத்திருமணமானது சிறுவர் திருமணமொன்றல்ல என நம்புவதற்கான தகுந்த காரணிகளை நிரூபிக்காதவரை, இரண்டு வருடம் நீடிக்கக்கூடிய கடூழிய சிறைத்தண்டனை மற்றும் நூறாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப் பணம் ஆகியவற்றை தண்டனையாக செலுத்துவதற்கு அருகதையுடையவர்;

(2) சிறுவர் ஒருவர் சிறுவர் திருமண ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளுமிடத்து, அப்பிள்ளைக்குப் பொறுப்பான யாராவது ஆள் அல்லது பெற்றோர், பாதுகாவலர் அல்லது வேறு யாராவது ஆள் அல்லது வேறுவிதமான முறையில், சட்டபூர்வமாக அல்லது சட்டபூர்வமற்றமுறையில் திருமணத்தை உற்சாகப்படுத்தக்கூடிய வகையில் ஏதாவது செயற்பாடுகளை மேற்கொண்ட அமைப்பொன்றின் யாராவது உறுப்பினர் அல்லது ஆட்களின் சங்கங்கள் உள்ளடங்கலாக அல்லது அத்திருமணச் சடங்கு நடைபெறுவதை கவனயீனமாகத் தடுக்காமல் விட்ட, சிறுவர் திருமணத்திற்கு வருகைதந்து பங்குபற்றிய யாராவது ஆள் உள்ளடங்கலாக, இரண்டு வருடம் நீடிக்கக்கூடிய கடூழிய சிறைத் தண்டனை மற்றும் நூறாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப் பணம் ஆகியவற்றை தண்டனையாக செலுத்துவதற்கு அருகதையுடையவர்;

(3) இரண்டு தரப்பினர்களும் பதினெட்டு வயதை பூரணப்படுத்தியவர்கள் என சம்பந்தப்பட்ட பதிவாளருக்கு பிழையான பிரகடனமொன்றை தெரிந்தோ அல்லது வேண்டுமென்றோ மேற்கொண்ட யாராவது ஆள் அதேவேளை அத்தகைய தரப்பு பதினெட்டு வயதை பூரணப்படுத்தாத நிலையில் இருப்பின், ஒரு வருடத்திற்கு மேற்படாத சாதாரண சிறைத்தண்டனை அல்லது ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது இரண்டையும் விதிக்கப்படுவதற்கான குற்றமிழைத்தவராகக் கருதமுடியும்;

**7**. ஏனைய ஏதாவது எழுதப்பட்ட சட்டத்தில் காணப்படுகின்ற ஏதாவது விடயம் எப்படியிருப்பினும் இந்த சட்ட ஏற்பாடுகள் செல்லுபடியாகும், அதன் பிரகாரம் ஏதாவது முரண்பாடு அல்லது மாறுபட்ட நிலை இந்த சட்ட ஏற்பாடுகளுக்கும் அத்தகைய ஏனைய சட்டங்களுக்கும் இடையில் காணப்படின், அத்தகைய ஏனைய சட்டத்தைவிட இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கியதாக இருக்கும்.

இந்த சட்ட ஏற்பாடுகள் ஏனைய சட்ட ஏற்பாடுகளை விட மேலோங்கியிருத்தல்.

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.